**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

<u>அசல் வழக்கு எண்.16/2020</u>

**<u>DW2</u>**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.ரத்தினவேல் | த/பெ. திரு.ஜெயராமன் | நாள் 10.06.2026 |

<u>பி.வா.சா.4 தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர்கள் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் நாங்கள் எதிர் தரப்பாக நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எங்க அப்பாவுக்கு சித்தப்பா மகள் ஆவார். எத்தனை அயிட்ட சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவர்களுடைய பாகம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது, வாதியின் அண்ணன்கள் செல்வராஜ் மற்றும் சிவாநந்தம் ஆகியோர்களிடம் கொடுக்கப்பட்டது. எவ்வளவு பாகம் கேட்டு வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் உள்ள வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் வழக்கு சொத்து நஞ்சையா, புஞ்சையா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.184 க்கு 165 செண்ட் ஆகும்.

2. சர்வே எண்.184 ல் உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியாது. தாவா கிராமம் ஜமீன் கிராமம் என்றால் சரிதான். ஆதியில் தாவா சொத்து சூணாம்பேடு ஜீமீன் ஆறுமுக முதலியாரிடமிருந்து எனது கொள்ளு பாட்டனார் நடேசன் முதலியார் சுயமாக கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். நடேச முதலியாருக்கு ஆனந்தாயி அம்மாள் மனைவி, சுந்தர விநாயகர் மகன், ஏகாம்பரம் மகன், சிதம்பரம் மகன் மற்றும் பட்டம்மாள் மகள் ஆகியோர்கள் இறந்த நடேச முதலியாருக்கு வாரிசுகள் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.1 ல் 18.12.2002 சுந்தர விநாயகர் மகன், ஏகாம்பரம் மகன், சிதம்பரம் மகன் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனந்தாயி அம்மாள் மற்றும் பட்டம்மாளும் பாகம் பிரிக்கவில்லை. ஏகாம்பரத்தின் வாரிசுகளான சரோஜா, வாதி முத்துக்கண்ணு அவர்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னால் உருவாக்கப்பட்ட பி.வா.சா.ஆ.1 வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

4. நடேச முதலியார் சொத்துக்களில் சுந்தர விநாயகர், ஏகாம்பரம் மற்றும் சிதம்பரம் ஆகியோர்களுக்கு தலா 3 ல் 1 பாகம் என்றால் சரிதான். வாதி ஏகாம்பரத்திற்கு சொந்தமான 3 ல் 1 பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. என்னுடைய வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு மூலம் தவறு என்று குறிப்பிட்டுள்ளன என்றால் எனக்கு தெரியாது. வாதி நீதிமன்ற கட்டணம் தவறாக செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. வழக்கு சொத்தில் வாதிக்கு அவருடைய தகப்பனார் ஏகாம்பர முதலியாரின் 3 ல் 1 பாகத்தில் சரிபாகம் அவருக்கு உரிமையுண்டு என்று அதை மறுக்க முடியுமா என்றால் முடியாது. என்னால் உருவாக்கப்பட்ட 18.12.2002 ஆவணம் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். வாதி கேட்க கூடிய பரிகாரம் ஏற்கத்தக்கது என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைந்துவிட்டது
மறுவிசாரணை, இல்லை

Taken down by me in open
read over to the witness and
acknowledged by him/her to
be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur